செய்தி வெளியீடு:602 25.7.2008

**<u>ஆதிதிராவிடர் நலத் துறை– பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை சார்பில்</u>**

**<u>127 கோடியே 63 இலட்சம் ரூபாய் செலவில் 5 இலட்சத்து 22 ஆயிரத்து 650 மாணவ, மாணவியருக்கு இலவச மிதி வண்டிகள் !</u>**

**<u>மாநில அளவில் அதிக மதிப்பெண் பெற்ற 10 மற்றும் 12ஆம் வகுப்பு !</u>**

**<u>மாணவ மாணவிகளுக்குப் பரிசுத் தொகைகள் !</u>**

**<u>ஆதிதிராவிட பழங்குடியின தமிழ்ப் படைப்பாளிகளுக்கு நிதியுதவிகள் !</u>**

**<u>முதலமைச்சர் கலைஞர் வழங்கினார்</u>**

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற விழாவில், தமிழகத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகள், மாநகராட்சி, நகராட்சி மேல்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றில் இவ்வாண்டில் 11ஆம் வகுப்பில் படிக்கும் மாணவ மாணவியர் அனைவருக்கும் இலவச சைக்கிள்கள் வழங்கும் பணிகளைத் தொடங்கி வைத்து, 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெற்று சாதனைகள் படைத்த மாணவ மாணவியருக்குப் பல்வேறு திட்டங்களின்கீழ் பரிசுத் தொகைகளை வழங்கினார், விவரம் பின்வருமாறு:

தமிழகத்தில் உள்ள அரசு மேல் நிலைப் பள்ளிகளிலும், அரசு உதவிபெறும் மற்றும் பகுதியாக நிதியுதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளிலும் 11ஆம் வகுப்பில் பயிலும் அனைத்து வகுப்புகளையும் சார்ந்த மாணவ, மாணவியர்க்கும் இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பள்ளிக் கல்வித் துறை ஆகிய துறைகளின் மூலம் செயல்படுத்தப் படுகிறது. நடப்பு ஆண்டில், 127 கோடியே 63 இலட்சம் ரூபாய் செலவில் 2 இலட்சத்து 38 ஆயிரத்து 900 மாணவர்களுக்கும், 2 இலட்சத்து 83 ஆயிரத்து 750 மாணவிகளுக்குமாக மொத்தம் 5 இலட்சத்து 22 ஆயிரத்து 650 மாணவ, மாணவிகளுக்கு இலவச மிதிவண்டிகள் வழங்கும் பணிகளைத் தொடங்கி வைத்தார்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில், தமிழகத்தில் உள்ள பள்ளிகளில் தமிழை ஒரு பாடமாகப் படித்து 2008 மார்ச் திங்களில் நடைபெற்ற 10ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெற்ற ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்த நான்கு மாணவ, மாணவியர்; பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த இரண்டு மாணவ மாணவியர்; கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்த நான்கு மாணவ மாணவியர்; என 10 மாணவ மாணவியர்க்கு தலா 10,000 ரூபாய் வீதம் மொத்தம் 1 இலட்ச ரூபாயையும்;

**12–ஆம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று மாநில அளவில் முதலிடம் பெற்ற ஆதிதிராவிடர், பழங்குடியினர், கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் ஆகிய மூன்று பிரிவுகளில் ஒவ்வொன்றிலும் ஒரு மாணவி, ஒரு மாணவர் என ஆறு பேருக்கு தலா 25,000 ரூபாய் வீதம் 1 இலட்சத்து 50,000 ரூபாய் என மொத்தம் 16 மாணவ, மாணவியருக்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பரிசுத் தொகைக்கான காசோலைகளையும்;**

**இதேபோல, 2008 மார்ச்சுத் திங்களில் நடைபெற்ற 10ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர், சிறுபான்மையினர் ஆகிய மூன்று பிரிவுகளில் ஒவ்வொரு பிரிவிலும், அதிக மதிப்பெண்கள் பெற்று மாநில அளவில் முதல் இடம் பெற்ற 43 மாணவ மாணவியர்க்கும், 12ஆம் வகுப்பில், அதிக மதிப்பெண்கள் ஈட்டி, மாநில அளவில் முதல் மூன்று இடங்கள் பெற்ற 25 மாணவ மாணவியர்க்கும் ஆகமொத்தம் 68 மாணவ, மாணவியருக்கு 3 இலட்சத்து 43 ஆயிரம் ரூபாய் பரிசுத் தொகையையும்;**

**அரசுப் பள்ளிகளில் படித்து ஒவ்வொரு மாவட்டத்திலும் 10ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்ட/சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த 10 மாணவ, மாணவியர்களையும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த 10 மாணவ, மாணவியர்களையும் தேர்வு செய்து, தமிழகத்தில் அவர்கள் விரும்புகின்ற சிறந்த மேல்நிலைப் பள்ளிகளில் சேர்ந்து மேல்நிலைக் கல்வி பெற ஒவ்வொருவருக்கும் ஆண்டுக்கு 28 ஆயிரம் ரூபாய்க்கு மிகாமல், இரண்டு ஆண்டுகளுக்கு 56 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கும் இந்த அரசின் திட்டத்தின்கீழ் 2008 மார்ச்சுத் திங்களில் நடைபெற்ற 10ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்றுச் சிறந்த பள்ளிகள் என விரும்பிச் சேர்ந்து பயிலும் 1200 மாணவ/மாணவியருக்கு 3 கோடியே 36 இலட்சம் ரூபாய் நிதியுதவியையும்;**

**5ஆம் வகுப்பு படித்து தேர்ச்சி பெற்ற ஆதிதிராவிட, பழங்குடியின, கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிட குழந்தைகளில், ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு மாணவன் அல்லது ஒரு மாணவி வீதம், 385 ஊராட்சி ஒன்றியங்களில் நுழைவுத் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட குழந்தைகளை, சிறந்த உண்டு உறைவிடப் பள்ளிகளில் 6ஆம் வகுப்பில் சேர்த்து அவர்கள் 12ஆம் வகுப்பு வரை பயில்வதற்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் நிதியுதவி வழங்கும் இந்த அரசின் புதிய திட்டத்தின் கீழ் 385 மாணவ மாணவியர்க்கு கல்விக் கட்டணத் தொகையையும்;**

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமுதாயத்தைச் சார்ந்த தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், ஆண்டுதோறும் அச்சமுதாயத்தில் சிறந்த 10 தமிழ் எழுத்தாளர்களைத் தேர்வு செய்து அவர்களின் படைப்புகளை நூல் வடிவில் வெளியிடுவதற்கு, படைப்பு ஒன்றுக்கு 20 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கும் புதிய திட்டத்தின்கீழ், 2007ஆம் ஆண்டின் சிறந்த தமிழ் எழுத்தாளர்களாகத் தேர்வு பெற்றுள்ள ஆதிராவிடர் மற்றும் பழங்குடியின சமுதாயத்தைச் சார்ந்த திரு. அ. ஜெகநாதன், திரு. ஜான் சுரேஷ் , திரு.இரா. ஸ்டாலின், திருமதி. டி. அருள்மேரி,**

**திரு.தி. கோபிநாத், செல்வி இ. சுகிர்தா, திரு. எஃப்.எஸ். தனசீலன், முனைவர் சு. மாதவன், திரு. ப. கணேசன், முனைவர் உ. பிரபாகரன் மற்றும் ஆதிதிராவிடர் அல்லாத எழுத்தாளர் திருமதி. தேன்தமிழ் ஆகியோரின் படைப்புகளை வெளியிடுவதற்காகப் படைப்பாளிகள் ஒவ்வொருவருக்கும் அளிக்கப்படும் தலா 20,000 ரூபாய் தொகையில் முதற்கட்டமாக ஒவ்வொரு படைப்பாளிக்கும் 10 ஆயிரம் ரூபாய் வீதம் மொத்தம் 1 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளையும் முதலமைச்சர் கலைஞர் வழங்கி, அனைவருக்கும் வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்தார்.**

**இலவச சைக்கிள்களையும், பரிசுகளையும், பாராட்டுச் சான்றிதழ்களையும், நிதியுதவிகளையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமிருந்து நேரில் பெறுவதற்கு வாய்ப்புகள் கிடைத்ததை எண்ணி மாணவ, மாணவிகளும், பெற்றோர்களும், எழுத்தாளர் பெருமக்களும் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமிதமும் கொண்டு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு தங்களுடைய நன்றியைத் தெரிவித்தனர்.**

**இந்நிகழ்வின்போது, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திரு. ஆ. தமிழரசி, தலைமைச் செயலாளர் திரு. எல்.கே.திரிபாதி, இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைச் செயலாளர் திரு. ந.வாசுதேவன், இ.ஆ.ப., ஆதிதிராவிடர் நலத் துறைச் செயலாளர் திரு. வி. கனகராஜ், இ.ஆ.ப., மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறை ஆணையர் திரு. பா. அண்ணாமலை, இ.ஆ.ப., ஆதிதிராவிடர் நலத் துறை ஆணையர், திரு. தங்க. கலியபெருமாள், இ.ஆ.ப., பழங்குடியினர் நலத் துறை ஆணையர் திரு. மாலிக் எ. பெரோஸ்கான், இ.ஆ.ப. ஆகியோர் உடனிருந்தனர்.**

***

**வெளியீடு**: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–**9.**